[17th December 1959

Renovation of temples

229 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to repair and renovate all the old and ancient temples in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : Under the Ancient Monuments Preservation Act, are these monuments kept in good repair, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that all these temples do not come under the Ancient Monuments Preservation Act.

The Madras Children Act

*230 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதியிலிருந்து 20-ம் தேதி வரைக்கும் மதுரையில் நடைபெற்ற ராஜ்ய சமூக சேவா மகாநாட்டில் "குழந்தைகள் நலனுக்காக கொண்டுவரப்பட்டுள்ள சென்னை சர்க்கார் சட்டத்தை அமுல் செய்ய ஜில்லாவாரியாக தனி போலீஸ் அமைக்கவேண்டும்" என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under the consideration of the Government.

SRI P. G. MANICKAM : முக்கியமாக ரெயில்வேக்களில் பிச்சை எடுக்கின்ற சிறுவர், சிறுமிகளையும், பஸ் ஸ்டாண்டில் பிச்சை எடுக்கும் சிறுவர் சிறுமிகளையும் பிச்சை யெடுக்காமல் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

Women as Stamp Vendors

*231 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

ஸ்டாம்பு வெண்டர் வேலை பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆமாம். கொடுக்கப்பட்டிருக்கிறது.

(Sri V. Sankaran rose.)

MR. SPEAKER : Why does the hon. Member stand up? It is enough if he raises his hand. He is sufficiently visible.

[17th December 1959]

SRIMATHI A. S. PONNAMMAL : இதுவரையில் எத்தனை பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தகவல் கிடைத்த வரையில் அத்திப் பூத்ததுபோல் ஸ்ரீரங்கத்தில் ஒரு வருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (சிரிப்பு).

SRI V. SANKARAN : இந்த வேலை பெண்களுக்கு கொடுக்கப் பட்டால் ஆண் ஸ்டாம்பு வெண்டருக்குள்ள வியாபாரமும், வாடிக் கையும் அடியோடு போய்விடும் என்பதை சர்க்கார் உணர்ந்து இந்த முடிவை அடியோடு கைவிடுவார்களா ? (சிரிப்பு).

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் களுக்குத் தெரியும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்பது. இதிலும் அது மாதிரி இருக்க வேண்டும்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : ஆண்களுடைய வேலை இதனால் பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆண் களின் வருவாய் தங்களுடைய குடும்பத்தையும் குழந்தைகளையும் வைத்து நிர்வகிப்பதற்கு போதுமான அளவில் இல்லாததால், பெண்களுக்கு வீட்டிலே வேலை செய்யும் முறையில் குடிசைத் தொழில், கைத்தொழில் முதலியவைகளில் ஈடுபடு வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கும் நல்ல சர்க்கார், புருஷர்களுக்கு பக்கபலமாக இருக்கும் பொருட்டு இன்னும் அதிகமான பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுப்பதற்கு முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னும் அதிகப்படி யான பெண்கள் இந்த வேலைக்கு முன் வந்தால் அவர்களுடைய தகுதியைப் பொருத்து முடிவு செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI : ஸ்டாம்பு வெண்டர் வேலையை பெண்களுக்கு கொடுப்பதுதான் நலம். பத்திரங்களை விற்கும் பொழுது வீட்டிலிருந்தால்தான் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க முடியும். ஆண்கள் ஸ்டாம்பு வெண்டர்களாக இருப்பதினால் அவர்கள் வேலைக்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் வீட்டில் இருப்பதில்லை. அதனால் அவர்கள் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க முடியவில்லை. இந்தக் காரணத்தை யொட்டி இன்னும் அதிகமான பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெண்கள் அதிகப் படியாக இந்த வேலை செய்வதற்கு முன்வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER : I think the majority is in favour of women. Why should the hon. Member Sri Sankaran bother? (Laughter.)